09.02.2021 DVC.1/2019 மசா.1- ராஜேஸ்வரி, க.பெ. கணேசன்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 16.11.2016 ம் தேதி என் மகனுக்கு பிறந்தநாள் கொண்டாடிவிட்டு சென்னைக்கு தனிக்குடித்தனம் சென்றதாக கூறியுள்ளேன் என்றும், அது தவறான சங்கதி என்றும், மேற்படி தேதிக்கு முன்னரே ஸ்ரீபெரும்புதூருக்கு சென்றுவிட்டோம் என்றும், மனுவில் கூறியுள்ள விவரங்கள் தவறு என்று சொன்னால், சரியல்ல. என் சகோதரியின் பெயர் மாலதி ஆகும். என் அக்கா மாலதி என்பவரும், ஸ்ரீபெரும்புதூரில்தான் குடியிருந்தார் என்று சொன்னால், சரிதான். 16.11.2016 ம் தேதி என் மகனுக்கு என் அக்கா வீட்டினருடன் ஸ்ரீபெரும்புதூரில்தான் கொண்டாடினோம் என்று சொன்னால், சரியல்ல. வனவாசியில்தான் கொண்டாடினோம். எந்த தேதியில் 1 ம் எதிர்மனுதாரர் என்னை வனவாசி வீட்டில் அழைத்து வந்து விட்டு விட்டு சென்றார் என்றால், தேதி ஞாபகமில்லை. ஆனால் அடித்து அழைத்துவந்துவிட்டுவிட்டார். 26.12.2016 ம் தேதி சனிக்கிழமை என் கணவர் என்னை அழைத்துவந்து வனவாசி வீட்டில் விட்டு சென்றுவிட்டார் என்று கூறியிருப்பது சரியா என்றால், சரிதான். நான் கூறும் தேதியானது சனிக்கிழமை அல்ல. திங்கள்கிழமை என்று சொன்னால், தேதி ஞாபகமில்லை. ஆனால் சனிக்கிழமைமதான் விட்டு சென்றார். 25.12.2016 ம் தேதி என் கணவர் என்னை வீட்டில் வைத்து பூட்டிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். ஆனால் தேதி ஞாபகமில்லை. 2 மற்றும் 3 ம் மனுதாரர்கள் ஜுலை 2014 ம் ஆண்டு சமரசம் பேசி என்னை அழைத்து சென்றார்கள் என்று என் மனுவில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால், எனக்கு 2015 ம் ஆண்டுதான் திருமணம் நடைபெற்றது. மேற்படி சம்பவம் 2016 ம் ஆண்டு நடைபெற்றது. ஆனால் 2014 என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. நான் திருமணம் மற்றும் குழந்தைகளை பற்றி மனுவில் சொல்லியுள்ள தகவலை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் தவறானது என்று சொன்னால், சரியல்ல. என் கணவர் எந்த வருடம் மலேசியா சென்றால் என்றால், 2017 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்றார். 20.1.2018 ம் தேதி அன்று, எதிர்மனுதாரர்கள் வீட்டில் இருந்து நான் என் அப்பா வீட்டிற்கு வந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். அவர்கள் என்னை வீட்டில் இருந்து அடித்து விரட்டிவிட்டனர். 20.1.2018 ம் தேதிக்கு பிறகு எதிர்மனுதாரர் என் இந்தியன் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பி வந்தார் என்று சொன்னால், சரிதான். 20.1.2018 ம் தேதி என்னை எதிர்மனுதாரர் அடித்து துரத்தியிருந்தால் அவர் எனக்கு

பணம் அனுப்பவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால், அவரின் அப்பா



09.02.2021 DVC.1/2019 மசா.1- ராஜேஸ்வரி, க.பெ. கணேசன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

அம்மாதான் அடித்து துரத்தியதாக கூறினேன். எனக்கு உதவி செய்ததாக சொல்லும் நபரின் பெயரை என் மனுவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால், என் கணவர் என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் வனவாசியில் சொந்தமாக ஓட்டல் கடை நடத்தி வந்தார். அந்த கடை யாருக்கு சொந்தமானது, என்ன பெயரில் நடத்தப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியாது. என் கணவருக்கு மாதம் ரூ.80,000/- வருமானம் வருகிறது என நான் கூறியுள்ள விவரம் தவறானது என்றும், 2018 ம் ஆண்டே அவர் வெளிநாட்டிற்கு சென்று அவரின் முழு சம்பளத்தையும் எனக்கு அனுப்பிவிட்டார் என்றும், அவரிடம் எந்த பணமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மாதம் ரூ.5000/-தான் அனுப்பியுள்ளார். நான் கூறியதுபோல் என் கணவர் சொந்தமாக ஓட்டல் தொழில் செய்யவில்லை என்றும், கூலிக்கு வீரக்கல்லில் ஒரு மளிகைக்கடையில் பொட்டலம் கட்டும் வேலைதான் செய்கிறார் என்று சொன்னால், சரியல்ல. அவர் தறி ஓட்டுகிறேன் என்றும், மாற்றி மாற்றி பேசுகிறார். நான் கேட்டுள்ள ஜீவனாம்ச தொகை மிக அதிகம் என்றும், அந்த அளவிற்கு பணம் கொடுப்பதற்கு 1 ம் எதிர்மனுதாரருக்கு வசதி இல்லை என்று சொன்னால், சரியல்ல. பால் கொள்முதல் செய்யும் வகையில் எனக்கு மாதம் ரூ.70,000/- வருமானம் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால், சரியல்ல. எதிர்மனுதாரர்கள் நான் கூறியதுபோல் எந்த செயல்களையும் செய்யவில்லை என்றும், தற்போது என்னுடன் 1 ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழதான் விருப்பப்படுகிறார் என்று சொன்னால், அவருடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பமில்லை. MC 5/2017 என்ற ஜுவானம்ச வழக்கை நான் தாக்கல் செய்து எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழ ஒத்துக்கொண்டுதான் நானாகவே அதை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. முதலமைச்சருக்கு கடிதம் எழுதிய வகையில் நங்கவள்ளி காவல்நிலையத்தில் விசாரணை நடந்தது. அதில் 1 ம் எதிர்மனுதாரர் என்னை எந்த கொடுமையும் செய்யாமல் வரதட்ணை கேட்காமல் நன்றாக பார்த்துக்கொள்வதாக எழுதிக்கொடுத்ததால்தான் அந்த வழக்கை வாபஸ் பெற்றேன். குழந்தைகளை பார்ப்பதற்காக 1 ம் எதிர்மனுதாரர் பலமுறை நேரில் வந்து கேட்டபோது நான் அதற்கு மறுத்துவிட்டேன் என்று சொன்னால், சரியல்ல. குழந்தைகளை, 1 ம் எதிர்மனுதாரர் பார்ப்பதற்கு, நான் அனுமதிப்பதில்லை என்று சொன்னால், சரியல்ல.